1993 ஏப்ரல் 21]

(முற்பகல் 10-50)

திரு. என்.ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தாலுக்கா, முட்டம் கிராமத்தின் அருகில் இந்த கொள்ளிடம் ஆறு பாய்கிறது. இதன் எதிர்திசையான தஞ்சை மாவட்டம் மணல்மேட்டு கிராமத்தை நாங்கள் அடைய வேண்டுமென்றால் காட்டுமன்னார்கோவிலில் இருந்து சுமார் 20கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள அணைக்கரையை அடைந்து, அங்கிருந்து 25 கிலோ மீட்டர் தூரம் உள்ள மணல்மேட்டை அடைய வேண்டும். ஆகவே, 45 கிலோ மீட்டர் தூரம் நாங்கள் பயணம் செய்யவேண்டியிருக்கிறது. அங்கே ஒரு தரைப்பாலம் அமைத்தால் 7 கிலோ மீட்டர் தூரத்திலே நாங்கள் அந்தக் கிராமத்தை அடைந்துவிடலாம். அதனால் நேரச் செலவும், பெட்ரோல், டீசல் போன்ற செலவும் மிச்சமாகும். ஆகவே, இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பாலம் அமைப்பதற்கு ஏறத்தாழ 10 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 10 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு மேம்பாலம் இருக்கின்ற காரணத்தினால் இவ்வளவு தொகை ஒதுக்கக்கூடிய சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்திலே, 10 கிலோ மீட்டர் தூரத்திலே உயர்மட்ட பாலம் இருக்கிறது. போக்குவரத்தும் அவ்வளவு நெரிசலாக செல்வதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆகவே, இந்த 10 கோடி ரூபாய் அளவிலே கட்ட தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 411, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

411—

எரிசக்தி தொடர்பாக செயல்விளக்க ஊர்தி அமைத்தல்.

*16114—திரு. கா.பூ. முனுசாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மரபுசாரா எரிசக்தி தொடர்பாக மாநிலங்களில் செயல் விளக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட நடமாடும் திட்ட செயல் விளக்க ஊர்தியைப்போல், தமிழ்நாட்டில் செயல் விளக்கத்திற்காக ஓர் ஊர்தியை உருவாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அது உருவாக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வினாவில் குறிப்பிட்டுள்ள ஊர்தி ஏற்கனவே 1/92 முதல் தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின் உபயோகத்தில் இருந்து வருகிறது.

(ஆ) ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எரிசக்தி ஊர்தி மத்திய அரசால் வழங்கப்பட்டதா அல்லது மாநில அரசால் உருவாக்கப்பட்டதா? அப்படி உருவாக்கப்பட்ட அந்த ஊர்தியை விரைவில் தர்மபுரி மாவட்ட பகுதிகளுக்கு அனுப்ப அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வூர்தியை வடிவமைக்க 7½ லட்சம் ரூபாய் ஒதுக்கி, குஜராத் மாநிலத்திலுள்ள மோனோ என்ஜினியரிங் பாடி பில்டர்ஸ், பரோடா மூலம் தயாரிக்கப்பட்டது. ஆகவே, அந்த ஊர்தி, நம்முடைய மாநில அரசின் சார்பிலே தான் தொகை ஒதுக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது. அந்த ஊர்தி இப்பொழுது பயன்படுத்தப்பட்டு, நல்லமுறையில் செயலாக்கத்தில் இருந்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 412. திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண். 413, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

413—

சின்னதாராபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைத்தல்.

*10564— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

அரவக்குறிச்சி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்து சின்னதாராபுரத்தை தலைமையிடமாகக் கொண்ட புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?